[5th August 1966

question is now being examined by the Government of India in consultation with the Union Public Service Commission. No decision has so far been communicated to this Government.

திரு. வை. சங்கரன்: அந்தக் காலத்திலேயே இதற்கு ஒரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படியில்லாவிட்டாலும்கூட நமது அரசாங்கம் இதை விரைவிலே கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்துவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கவேண்டும். இதில் தாமதம் இருக்கிறது என்று சொல்வதற்கு இடம் இல்லை.

நெல்லையில் அரசாங்கத் தமிழ்க் கல்லூரி

* 104 கேள்வி.—**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரையில் சர்வகலாசாலை வருவதையொட்டி மதுரை, இராமநாதபுரம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களுக்கு நடு நாயகமாக விளங்கும் நெல்லையிலே அரசாங்கத் தமிழ்க் கல்லூரி ஒன்றும், தமிழ்ப் புலவர் பயிற்சிக் கல்லூரி ஒன்றும் வருகிற கல்வி ஆண்டிலிருந்து ஆரம்பிக்க, அரசினர் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no such proposal now.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இந்த ராஜ்யம் முழுமையிலும் உள்ள தேவாலயங்கள், அறநிலையங்களினுடைய நிதி வசதி பெற்று ஏதாவது ஒரு பிரதான இடத்தில் திருநெல்வேலி அல்லது பெரிய தேவாலயங்களுக்குப் பக்கத்தில் ஒரு தமிழ்க் கல்லூரியை வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆலயங்களுக்குப் பக்கத்தில் சில கல்வி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்க் கல்லூரி அங்கு ஏன் இருக்கவேண்டும், அதன் லட்சியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. தமிழர்கள் எந்தெந்த வகையில் பயன் அடைய முடியுமோ, அந்த முறையிலே கல்வி ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

Government Arts College, Ootacamund

* 105 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the construction work of the Biology Block in the Government Arts College, Ootacamund, has been suspended in view of the emergency?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No. The work in question was ordered to be suspended because the allotment made for the work for 1965–66 was fully utilised. Permission has since been accorded to proceed with the work.